In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.192/2025

Deposition of the PW.2 solemnly affirmed by this Court on 11.07.2025 in accordance with the provision of the Act X of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.அசோகன் | Calling | : |
| Father/Husband Name | : திரு.குமாரசாமி | Village | : |
| Age : | | District | : |

வா.சா.2ன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை –

நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னது தான், அதில் கண்டுள்ள விவரங்கள் உண்மை என உறுதியாக கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2–வது சாட்சியாக உள்ள லட்சுமி என்கிற கையொப்பம் என்னுடைய தாயாரின் கையொப்பமாகும். அதில் ராஜாம்பாள் கையொப்பம் செய்துள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடைய பெரியம்மாவின் கையொப்பமாகும். மேற்படி இரண்டு சாட்சிகளும் தற்போது உயிருடன் இல்லை. என் தாயார் லட்சுமியின் இறப்பு சான்றிதழையும், வாரிசு சான்றிதழையும் நான் தாக்கல்

செய்துள்ளேன்.

சா.சா.ஆ.1 – 11.07.2018 – லட்சுமி என்பவரது இறப்புச் சான்றிதழ் – ஜெராக்ஸ் நகல்.

சா.சா.ஆ.2 – 22.10.2018 – லட்சுமி என்பவரது வாரிசு சான்றிதழ் – ஜெராக்ஸ் நகல்.

சா.சா.ஆ.3 – என்னுடைய ஆதார் கார்டு – ஜெராக்ஸ் நகல்.